

நேற்று (17-10-2026), மறைந்த திரை இசையமைப்பாளர் 'தேனிசை தென்றல்' தேவா அவர்களுக்குக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இறுதி மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோரும் உடன் சென்று அஞ்சலி செலுத்தினர்.

'தேனிசைத் தென்றல்' தேவாவை விட்டுவிட்டு

தமிழ் வெகுசன இசை வரலாற்றை எவராலும் எழுத முடியாது!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தியில் புகழாரம்!

சென்னை, அக். 18-

'தேனிசைத் தென்றல்' தேவாவை விட்டு விட்டு தமிழ் வெகுசன இசை வரலாற்றை எவராலும் எழுத முடியாது, என்று அவரது மறைவுக்கு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் புகழாரம் சூட்டியுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

தேனிசைத் தென்றல் தேவா அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சிக் குள்ளானேன்.

பொறாமை, வஞ்சகம், சூது வாது ஏதுமறியாத வெள்ளை மனம் கொண்டவர் தேவா. கானா வகைமைப் பாடல்களைத் திரையிசையில் பெரிய அளவில் புகுத்தி, கானா என்றாலே தேவாதான் என அறியப்பட்டவர்.

எளிமையான கிராமத்துப் பின்னணியில் இருந்து சென்னைக்கு வந்து, தென்னிந்தியத் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளராக உயர்ந்து எத்தனையோ பேருக்கு ஆதர்சமாகத் திகழ்ந்தவர். உச்ச நட்சத்திரங்கள் அனைவரது திரைப்படங்களுக்கும் இசையமைத்து, அவற்றின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவர்.

குறிப்பாக, சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுடன் தேவா அவர்கள் இணைந்து பணியாற்றிய அண்ணாமலை, பாட்ஷா, அருணாசலம் ஆகிய திரைப்படங்களின் பாடல்கள் பெருவெற்றியை ஈட்டின. இன்றளவும், தேவா அவர்களின் இசையோடுதான் ரஜினிகாந்த் அவர்களின் பெயர் திரையில் தோன்றுகிறது என்பதில் இருந்தே அதன் வீச்சை உணர்ந்துகொள்ளலாம். நான் ஆட்டோக்காரன் ஒலிக்காத ஆட்டோ ஸ்டாண்டுகளே தமிழ்நாட்டில் இருக்காது.



கலைஞானி கமலஹாசன் அவர்களது அவ்வை சண்முகி, பஞ்சதந்திரம் போன்ற நகைச்சுவைப் படங்களிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளார்.

ரஜினி, கமல் மட்டுமல்லாமல், கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்கும் பாசமுள்ள பாண்டியரே உள்ளிட்ட பல வெற்றிப்பாடல்களை தேவா அளித்திருக்கிறார். குறிப்பாக, வாராரு அழகர் வாராரு என்ற தேவாவின் பாடல் இல்லாத சித்திரைத் திருவிழாவை மதுரைக்காரர்களால் நினைத்துப் பார்க்கவே முடியாது.

நாயகர்களுக்கான mass பாடல்கள் மட்டுமின்றி, மனதை வருடும் மெல்லிசைப் பாடல்களிலும் தேவாவுக்கு நிகர் தேவாதான். ஆசை, காதல் கோட்டை, கண்ணெதிரே தோன்றினாள், காலமெல்லாம் காதல் வாழ்க, ஆஹா என நூற்றுக்கணக்கான திரைப்படங்களில் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் மெல்லிசையை தேவா தந்துள்ளார். தலைவர் கலைஞர் அவர்கள் தான், தேவா அவர்களின் இசையின் இனிமையை மெச்சி 'தேனிசைத் தென்றல்' என்ற பட்டத்தை அவருக்கு வழங்கினார்.

எண்பதுகளில் தனது திரையிசைப் பயணத்தைத் தொடங்கிய அவர் இன்றைய இளைஞர்களான அனிருத் உள்ளிட்டோரின் இசையிலும் எந்தத் தலைக்கனமும் இல்லாமல் நட்புணர்வோடு பாடியுள்ளார். அண்மைக்காலமாக, அவரது இசைக் கச்சேரிகளும் எல்லா ஊர்களிலும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன.

தமிழ் வெகுசன இசை வரலாற்றை தேவா அவர்களை விடுத்துவிட்டு எவராலும் எழுத முடியாது. பல அத்தியாயங்களை அவருக்கென ஒதுக்கியாக வேண்டும்.

ஒருபுறம் இசைஞானி இளையராஜா அவர்களும், மறுபுறம் இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் அவர்களும் கோலோச்சிய காலத்திலும் தேவா தனக்கெனத் தனிப்பாதை அமைத்து வெற்றி கண்டார். இசையில் வல்லவர் என்பதைத் தாண்டி, மிகவும் நல்லவர் என்ற பெயரையும் பழகிய அனைவரிடமும் பெற்றவர்தான் தேவா.

தேவா அவர்கள் மண்ணை விட்டு மறைந்தாலும் அவரது தேனிசைத் தென்றல் வீசுவது நிற்காது. தேவா அவர்களை இழந்து வாடும் அவரது மகன் இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா, சகோதரர் முரளி உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், திரையுலக நண்பர்களுக்கும், தேவா அவர்களின் இரசிக நெஞ்சங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து, தலைமைச் செயலகத்திலே 'கரண்ட் கட்டாச்சே'. அது ஒரு அமைச்சரின் ஏற்பாட்டால் நடந்ததா பேசிக்கிறாங்களே உண்மையாவா இருக்கும்.

சிந்துமணி : ஆமாண்டி அந்து; நான் கூட ஒரு பேப்பர்ல அப்படித்தான் படிச்சேன், இரண்டு எம்.எல்.ஏ.க்கள் பதவி ஏற்பு நிகழ்ச்சியிலே மற்ற அமைச்சர்கள் நின்று கொண்டிருக்க, மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல்குமார் மட்டும் வாட்ட சாட்டமா உட்கார்ந்திருந்த தால எரிச்சலடைந்த இன்னொரு அமைச்சர் ஒருவர் செய்த வேலையாம். எப்படி இந்த ஆட்சியின் லட்சணம்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(16.10.2026)



1. காஞ்சிபுரம் மாவட்டம், மாங்காடு அருகே சங்கர் நகர் பகுதியில் உள்ள போதை மறுவாழ்வு மையத்தில் வாலிபர்களுக்குள் ஏற்பட்ட தகராறில் வாலிபர் கழுத்தில் கத்தியால் குத்தி கொலை.

2. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் உத்தரப்பள்ளி அருகே நடுரோட்டில் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தை எடுக்குமாறு கூறியதில் ஏற்பட்ட தகராறில் வாலிபர் கத்தியால் குத்தி கொலை.



3. கடலூர் மாவட்டம், ரெட்டிசாவடி அருகே முன்விரோதம் காரணமாக புது மாப்பிள்ளை சரமாரியாக வெட்டி படுகொலை.

4. மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி அருகே போலீசில் புகார் கொடுத்ததால் ஆத்திரமடைந்து தொழிலாளி சரமாரியாக குத்தி படுகொலை.



5. நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை அருகே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கைதி தூக்கு போட்டு மர்ம சாவு, கணவன் இறந்ததில் மர்மம் இருப்பதால் சி.பி.சி.ஐ.டி. விசாரிக்க மனைவி ஐகோர்ட்டில் வழக்கு.



6. சென்னை காசிமேட்டைச் சேர்ந்த 15 வயது சிறுமியை புதுச்சேரி அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த த.வெ.க. நிர்வாகி தலைமறைவு.

7. நாகர்கோவில் அருகே அஞ்சு கிராமத்தில் நர்சிங் மாணவியை பலாத்காரம் செய்து கருக்கலைப்பு. அரசு பெண் டாக்டர் உட்பட மூன்று பேர் சிக்கினர்.



8. ஈரோடு மாவட்டம் ஊஞ்சலூர் அருகே செவிலியர் போல் நடித்து மூதாட்டிக்கு மயக்க ஊசி போட்டு 4 பவன் நகை பறிப்பு.

9. திருநெல்வேலியில் இந்தியன் வங்கி பொது மேலாளரை காரில் கடத்தி சென்று வீட்டில் அடைத்து வைத்து மிரட்டி 7 லட்சம் பணம் பறிப்பு.



10. இலங்கையில் இருந்து நாகப்பட்டினத்திற்கு கடத்தி வந்த 135 கோடி ரூபாய் மதிப்புள்ளான உயர் ரக போதை பொருள் பதுக்கி வைத்த த.வெ.க. மாவட்ட நிர்வாகி சிக்கினார்.

11. த.வெ.க.வில் கவுன்சிலர் சீட்டுக்கு ரூ.10 லட்சம் முதல் ரூ.15 லட்சம் வரை பேரம், மதுரை த.வெ.க. எம்.எல்.ஏ., உதவியாளர் பேசும் ஆடியோவால் பரபரப்பு.

12. கும்பகோணம் ரயில் நிலையத்தில் படியின் அருகில் அமர்ந்திருந்த வாலிபரை உள்ளே செல்லச் சொன்ன பெண் போலீசை தாக்கிய வாலிபர்.

ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் –

கழக மூத்த முன்னோடி ப.க.சிவகுருசாமி மறைவு!

ஐ.பி.செந்தில்குமார் – கழக நிர்வாகிகள் அஞ்சலி!

திண்டுக்கல், அக்.18-

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி, ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளராக பணியாற்றி வந்த ப.க.சிவகுருசாமி அவர்கள் 17.10.2026, சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த ப.க.சிவகுருசாமி அவர்கள் கடந்த 1978 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய கழகச் செயலாளராக தொடர்ந்து 48 ஆண்டுகளாகவும் 1986 முதல் 1991 வரையிலும் மற்றும் 2021



முதல் 2026 வரையிலும் ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவராகவும் சிறப்பாக பணியாற்றியதுடன் தற்போதும் தனது 89வது வயதில், ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளராக சிறப்பாக பணியாற்றியதுடன் 2026 முப்பெரும் விழாவில் சிறந்த ஒன்றியச் செயலாளர் விருதிற்கு தலைமைக் கழகத்தால் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார்.

இவருக்குபிச்சையம்மாள் என்கிற மனைவியும், சி.சக்ரவர்த்தி மணிமாறன், சி.தம்பித்துரை என்கிற இரண்டு மகன்களும் சி.மணிமேகலை என்கிற ஒரு மகளும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து, மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றியச் செயலாளர்

ப.க.சிவகுருசாமி மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 18-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம், ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ப.க.சிவகுருசாமி அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

ப.க.சிவகுருசாமி அவர்கள் 1978ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 48 ஆண்டுகள் ஒன்றியச் செயலாளராக கழகத்தில் பொறுப்பு வகித்து வந்ததோடு, கடந்த மாதம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் 'சிறந்த ஒன்றியச் செயலாளர்" விருதினை பெற்றவர்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் - கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.